அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 4 சட்டமன்ற உறுப்பினர்கள் இணைந்து நடமாடும் கால்நடை மருந்தகம் அவசியமாகத் தேவை, மலைப் பகுதிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு அது தேவை என்று கூறி அதற்காக சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து வாகனமும் வாங்கப்பட்டுள்ளது. இந்தத் துறை மானியக் கோரிக்கையில் அதற்கான பதிலை அளிக்கலாமென்று இருந்தேன். மேற்படி நடமாடும் கால்நடை மருந்தகம் அமைக்க நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கியுள்ளார்கள். அதனால் விரைவில் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 169, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

**169—**

**பயிற்சி**

***35103—திரு. அ. சௌந்திரபாண்டியன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் மாணவ, மாணவியருக்கு மத்திய மற்றும் மாநிலப் பணிகள் தேர்வுகளுக்கான பயிற்சியை தாட்கோ மூலம் அளிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அனைத்து மாவட்டத் தலைநகரிலும், தாட்கோ மூலம் மத்திய மாநிலப் பணித் தேர்வுகளுக்கான பயிற்சி அளிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்திரபாண்டியன்.

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு நாட்கோ மூலம் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சார்பில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றனவா? எத்தனை இடங்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன? எந்த ஆண்டு முதல் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன? அதற்காக செலவிடப்பட்ட நிதிகள் எவ்வளவு? இந்திய ஆட்சிப் பணியில் இந்த ஆண்டு நிர்வாகத் தேர்வுக்குச் சென்றவர்கள் எத்தனைபேர்? மேலும், சென்னை அண்ணா நகரில் இருப்பதுபோல் மாவட்டத் தலைநகரங்களில் பயிற்சி மையங்கள் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சார்பில் 1999 ஆம் ஆண்டு முதல் அனைத்து மாவட்டங்களிலும் மத்திய மற்றும் மாநில அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களில் மற்றும் வங்கிகளில் ஏற்படும் காலி இடங்களுக்கு நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகளில் பங்கேற்கும் மனுதாரர்கள் தாங்கள் போட்டியிடும் திறனை வளர்த்துக்கொள்வதற்காக பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதற்காக மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் இயங்கும் தன்னார்வ பயிலும் வட்டங்களுக்கு மாதம் ரூபாய் 5,000 வீதமும் ஊராட்சி ஒன்றியங்களில் இயங்கும் தன்னார்வ பயிலும் வட்டங்களுக்கு ரூ.1,000 வீதமும் அரசால் ஒப்பளிப்புச் செய்யப்படுகிறது. தற்போது 30 மாவட்டங்களில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் 385 ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரைக்கும் 97,123 மனுதாரர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இத்திட்டத்திற்கு இதுவரை ரூ.380.43 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல இந்திய ஆட்சிப் பணியில் முதல் நிலைத் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு முதன்மைத் தேர்வுக்குச் செல்வதற்காக Main Exam செல்வதற்காக 100 பேருக்கு தலா ரூ. 25,000 வழங்கலாம் என்று முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டிருந்தார்கள். ஆனால் ஆதி திராவிடர் மாணவ, மாணவிகள் 148 பேர் அந்தத் தேர்வில், அதாவது preliminary தேர்வில்

2008 ஏப்ரல் 28]

வெற்றி பெற்றிருந்தார்கள். அவர்கள் மேல்நிலைத் தேர்வுக்கு, முதன்மைத் தேர்வுக்குச் செல்வதற்காக 148 பேர்களுக்கும் தலா ரூ. 25,000 வழங்கியவர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். இன்றைக்கு அந்த மாணவர்கள் 37 பேர்கள் நேர்முகத் தேர்வுக்கு சென்றிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின்மூலமாக அந்தந்த மாவட்டங்களில் ஊராட்சி ஒன்றியப் பணிகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தனியாக ஆரம்பிப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரின் விரிவான பதிலுக்கு நன்றி. அதேவேளையில் சென்னை அண்ணா நகரில் இயங்குவதைப் போன்று மாவட்ட அளவில் இல்லாவிட்டாலும், மண்டல அளவிலாவது திருச்சி, மதுரை, கோவை, நெல்லை போன்ற இடங்களில் இதுபோன்ற பயிற்சி மையங்கள் எதிர்காலத்தில் ஆரம்பிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகளுக்கான தேர்வுகளுக்கு ஆதி திராவிட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு அண்ணா நகரிலே பயிற்சி அளிக்கப்படுகிறது. மாநில அளவிலே பயிற்சி அளிக்கும்போதுதான் infrastructure என்று சொல்லக்கூடிய அடிப்படை வசதிகளை நாம் செய்து தந்திருக்கின்றோம். அந்தக் காரணத்தினாலேதான், இதுவரையிலே எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு கலைஞருடைய ஆட்சியில் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த, இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் 54 பேர் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு மாவட்டத்திலுடைய தலைநகரிலும் இப்படிப்பட்ட பயிற்சிகள் வழங்குவது என்பது இயலாத காரியம். தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய மாணவர்களுக்கு இங்கே பயிற்சி கொடுக்கிறோம். அவர்களுக்குத் தங்கும் இடம், உணவு அத்தனையையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்கிறது.

[2008 ஏப்ரல் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமைத்தக்க நிகழ்வுகள் அவ்வப்போது நிகழ்வது உண்டு. அந்த வகையிலே, ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பாக பயிற்சி அளிக்கப்பட்ட விமானப் பணிப் பெண்களில் பயிற்சி முடித்த 200 பேரை நம்முடைய தமிழக முதல்வர் சந்தித்தது ஒரு பெருமைக்குரிய நிகழ்வு என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். அப்படிப் பயிற்சி பெற்ற, தேர்வு பெற்ற விமானப் பணிப் பெண்கள் இப்போது வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்களா? அதற்கு துறை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? எந்த அளவிற்கு அந்த முயற்சி வெற்றி பெற்றிருக்கிறது என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் 200 பேருக்கு அந்தப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு பெண்கள் 100 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. ஆண்கள் 100 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு பயிற்சி பெற்ற அந்த 100 பெண்களில் 50 சதவீதத்திற்கும் அதிகமான பெண்கள் வேலைவாய்ப்பைப் பெற்று பணியில் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள். பணியில் வருமானம் ஈட்டிக் கொண்டிருக்கிறார்கள். மீதமுள்ள நபர்களுக்கும் பணி வாய்ப்பு வழங்குவதற்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டும் அந்த மாதிரியான பயிற்சிகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விமானப் பணிப் பெண் பயிற்சி என்பது தற்போது விமானங்கள் அதிக அளவில் மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதனால் வேலைவாய்ப்புகள் அதிகமாகி இருக்கின்றன. எனவே, பயிற்சி பெற்ற அனைவருக்குமே நிச்சயமாக வேலை கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 170, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. கணபதி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.